637
637
2.59

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்ரிகை

விகாரி
சித்திரை - வைகாசி

MAY
1959

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAY 1959
MADRAS

தொகுதி 21
பகுதி 5

Vol. 21
No. 5

ஆசிரியர் :
பண்டித ஸ்ரீ. மெ. ஸௌந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம்.
உப ஆசிரியர் & பிரசுரகர்த்தா:
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.

பொருளடக்கம்

மெடிகல் பிராக்டிஷனர்	3
...லசிகித்ஸா	5
...பூத யோகங்கள்.	9
...யஸ்ரீ பண்டித நாராயணய்யங்கார் ஸ்வாமி	13
...வ சூலம்	19
...ச் சொற்கள் அகராதி (தனி)	21—24

3L
ஜ2211, N39
M59.24.5
188876.

Annual Subscription Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

நீலீபிருங்காதி தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கும் எல்லா கால நிலேகளிலும் ஆரோக்கியமான கூந்தல் வளத்திற்கும் மெருகுக்கும் அனேவராலும் பாராட்டப் பட்டது.

தயாரிப்பாளர்கள் :

ஆர்ய வைத்தியசாலா

(ஸ்தாபிதம் : 1902)

கோட்டக்கல். (கோழிக்கோடு ஜில்லா)

கிளேகள் : கோழிக்கோடு (போன் 155) திரூர் (போன் 31), பாலக்காடு (போன் 104), ஈரோடு, மற்றும் எர்ணுகுளம். விற்பனே டிப்போ : பாலக்காடு (வெட்டிகுளம் ரோட்).

600-க்கு மேற்பட்ட தரமான ஆயுர்வேத மருந்துகள் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படுகின்றன. எமது தலேமை ஆபீஸிலும், கிளேகளிலும் சிறந்த ஆயுர்வேத சிகிச்சைகள் அளிக்கப் படுகின்றன. நவரக்கிழி, தாரா, பிழிச்சல் முதலான விசேஷ கேரள முறைகளும் கோட்டக்கல்லில் எங்கள் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங் ஹோமில்** மிதமான கட்டணங்களில் அளிக்கப் படுகின்றன. நேரில் ஆலோசித்தோ அல்லது தபால் மூலமோ, எமது பிரதான வைத்தியர் சிகித்சையும், மருந்தும் அளிப்பார்.

மேல் விவரங்களுக்கு தயவு செய்து

மானேஜிங் டிரஸ்டிக்கு எழுதவும்.

A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

Have your requirments from :—

KALIA BROTHERS (Regd.)

5C/9, ROHTAK ROAD, NEW DELHI—5.

OR

KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA.

✲

ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானல்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரீக்ஷை செய்ய
வேண்டாம்.

உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

5 C/9, ரோஹ்தாக் ரோடு, புது டில்லி—5.

அல்லது

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலா:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
31, சின்னக்கடைத் தெரு.
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன,

வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

எமது விசேஷ மருந்துகள்

4. சந்திரிகாவலேஹம்.

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிர ஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, மானேஜிங் டைரெக்டர்

188816

ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 21	விகாரி – சித்திரை – வைகாசி	பகுதி 5
Vol. 21	MAY 1959	No. 5

आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

மெடிகல் பிராக்டிஷனர்

சென்ற ஜனவரி 17ம் தேதியன்று வெளியான மத்ய சர்க்கார் கெஜட்டில் டிரக்ஸ் ரூல்ஸ் 1945ல் குறிப்பிட்ட மெடிக்கல் பிராக்டிஷனர் என்றபதத்திற்கு அலோபதிக் டாக்டர். டென்டிஸ்ட், வெடரினரி ஸர்ஜன் இவர்கள் தாம் பொருள் என்று விரிவுரை காணப்படுகிறது. வைத்யர்களோ ஹகீம்களோ மெடிகல் பிராக்டிஷனர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

பிரிடிஷ் பார்மகோபியா, அமெரிகன் பார்மகோபியா, இண்டியன் பார்மகோபியா முதலிய அலோபதி ஔஷத ஸம்ஹிதைகளில் குறிப்பிட்டுள்ள மருந்துகளை உபயோகிக்கும் அதிகாரம் யாருக்கு உண்டு என்பதைப் பற்றிய விளக்கம் தான் இந்த கெஜட்டில் அளிக்கப்பட்டுள்ளது. இதைக் கண்டிக்கவும் வேண்டும்; வரவேற்கவும் வேண்டும்.

ஆம். இந்த இருவிதச் செய்கைகளும் தேவை தான். மருத்துவப் பொது அறிவு உள்ள எந்த வைத்யனும் ஹகீமும் ஒரு ஔஷதத்தின் குணதர்மங்களை நன்கு அறிந்தபின் அதை உபயோகப்படுத்துவதில் ஏற்படுத்தும் தடை அவனையும் ஆயுர்வேத யூனானி வைத்யசாஸ்திரங்களையும் அவமதிக்கும் செய்கை. வைத்யனால் தம் ஔஷதஸம்ஹிதைகளில் குறிப்பிட்டுள்ளவை

களைத் தவிர மற்றவைகளை அறிய முடியாது என்ற கொள்கை பொருமையை அடிப்படையாகக் கொண்டது. அலோபதிநிபுணன் ஆயுர்வேத மருந்துச் சரக்குகளையோ மருந்துகளையோ கையாள்வதில் இவ்விதத் தடை ஒன்றும் கொண்டுவரப்படவில்லை. அவன் எவ்விதம் இந்த சரக்குகளைப்பற்றிய அறிவைப் பெற்றான்? எவ்விதம் பெற முடிந்தது என்பது பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. மருந்து உற்பத்தியாளரின் விளம்பரக்கடிதங்களைத் தவிர அவனுக்கு வேறு ஆதாரக்கல்வி பெறும் வசதி ஒன்றும் கிடையாது. இந்த உரிமையை வைத்யனுக்கு அளிக்க மறுப்பது அடிப்படையில் எவ்வளவு அநீதியாகும் என்பதை அரசாங்கம் கவனிக்கவில்லை.

இந்த உரிமையைப் பறிக்கும் போது மற்றொரு அநீதியும் தானே இழைக்கப்படுகின்றது. இந்தியன் பார்மகோபியாவில் கர்பூரம், கல்சுண்ணாம்பு. பொதினாசத்து, ஓமசத்து, கருவேலம் பிசின் போன்ற பொருள்களும் இடம் பெறுகின்றன. இவைகளை உபயோகிக்கும் போது டிரக் சட்டமும் அதை அமூலாக்கும் டிரக் இன்ஸ்பெக்டர்களும் தலையிடலாம். இது கிரமமாக எவ்வளவு பெரும் அநீதியில் கொண்டுவிடும் என்பதைப்பற்றி நாம் ஆராய்வது அவசியம். அதனால் இந்த சர்க்கார் விரிவுரையை நாம் கண்டித்து இவ்வித விரிவுரைக்கு மறுப்பு வெளியாக ஆவன செய்வது நமது கடமையாகின்றது.

மறுபக்கத்தில் இது வரப்பிரஸாதம் போன்று வரவேற்கப்படவேண்டியதாகின்றது. வைத்யர்களும் ஹகீம்களும் பெரும் அளவில் ஆண்டிபயாடிக் மருந்துகளை உபயோகிப்பதைத் தடை செய்ய இது உதவுகின்றதாக அலோபதிகர்கள் நினைக்கின்றனர். இவைகளைத் தடைசெய்வதன் மூலம் கிரமமாக வைத்யர்களின் சக்தியையே பறித்து விடலாம், இவைகள் இல்லாவிடில் வைத்யர்கள் தொழில் நடத்த முடியாது என்பது அலோபதிகர்களின் எண்ணம். இந்த நிலை ஓரளவு உண்மை எனினும், அதனால் வைத்யர்களின் தற்பெருமை ஓரளவு குறைவதும் உண்மை எனினும், இதை மாற்றி அமைத்து அலோபதி மருந்துகளைக் கையாளும் அவசியத்தைக் குறைத்துக் கொள்வது ஸாத்யமாகாததல்ல. இவ்விதத் தடைகளின் மூலம் தன்மான உணர்ச்சி பெற்ற சில வைத்யப் பெரியார்களாவது தகுந்த ஊக்கத்துடன் சிறிது காலம் உழைக்க முற்படின் இதையே நமது நன்மைக்குத் திரும்பும் நற்செய்கையாகவும் மாற்ற முடியும். கடவுள் அருள் பரிபாலிப்பராக.

பாலசிகித்ஸா

ரக்த ஸ்தம்பம்

ரத்தம் ஓரிடத்தில் அதிமாகச் சேரவும் வாதாதிகள் சீர் கேடடையவும் உதவும் ஆஹார விஹாரங்களால் ரத்தம் கெட்டு ஓரிடத்தில் சேர்ந்து ஸ்தம்பித்து நின்று ஓட்டம் தடைபட்டு வாதத்தின் ஸஞ்சாரத்தையும் தடைசெய்கின்றது. வாயுவின் மார்க்கத்தில் தடை ஏற்பட்டதும் மேலும் மேலும் அந்த வாயுவி னுல் ரத்தம் வரண்டு ஆங்காங்கு கைகால்களில் குஷ்டம் போன்று உருவாகும் ரத்தஸ்தம்பம் எனும் நோயை உண்டாக்குகின்றது. ரத்தவாதம், வாத ரக்தம், ஆட்யவாதம், வாதபலாஸகம், குடம் என்ற மாற்றுப் பெயர்கள் இதற்குண்டு.

இவ்வியாதி உண்டாகும் காலத்தில் உடல் முழுவதும் தளர்ச்சி, பூட்டுக்களில் அயர்வு, வலி, நிறம் கருத்துப்போதல், கன உணர்ச்சி, மறத்துப்போதல், ரத்தக்கட்டு இவை அறிகுறி களாகத் தோன்றும்.

முதலில் இந்நோய் தோலையும் தசையையும் பற்றி உண்டா கும். பிறகு எலி விஷம் போலப் பரவி எல்லா தாதுக்களையும் பிடிக் கும். வாதத்தையோ பித்தத்தையோ கபத்தையோ ஏதாவது ஒருதோஷத்தை மாத்திரம் காரணமாகக் கொண்டு ஏற்படும் நோய் ஸாத்யமாகும். இரு தோஷச் சீர்கேட்டால் ஏற்படுவது யாப்யம். ஸந்நிபாதத்தால் ஏற்படுவது அஸாத்யம். துர்நாற்றத்துடன் சீழ் கலந்த ரத்தம் வடிந்தும் ரத்தம் மிகவும் உரைந்து அர்புதம் ஏற் பட்டும் உள்ளது மிகவும் அஸாத்யம்.

சிகித்ஸை சீந்தில், தண்ணீர்விட்டான், அதிமதுரம், நெல்லி முள்ளி, இவைகளின் கஷாயம், சதுர்வர்ககஷாயம் எனப்படும். ரத்தஸ்தம்பத்தைப் போக்க வல்லது. சிற்றுமுட்டி, நீர்முள்ளி வேர், நெல்லிமுள்ளி, சீந்தில், கரும்பு, தண்ணீர் விட்டான் கிழங்கு இவைகளின் கஷாயம் அதிமதுரத்தூள் கலந்து சாப்பிட நல்லது. இது ஷட்வர்க்க கஷாயமாகும். தண்ணீர் விட்டான் கிழங்கு, புத்தரிச்சுண்டைவேர், நெல்லிமுள்ளி, சீந்திற்கொடி, கோரைக் கிழங்கு திரிபலை. பேய்புடல் இவைகளின் கஷாயம் நெய் சேர்த்துச்

சாப்பிடலாம். தோஷகோபம் அதிகமாயிருந்தால் சிற்றுமணக் கெண்ணெய்யை பசுவின் பாலில் கலந்து சாப்பிடலாம். கடுக்காய் கஷாயத்தில் நெய் சேர்த்தும் சாப்பிடலாம். தண்ணீர் விட்டான் கிழங்கு, சீந்திற்கொடி இவைகளின் கஷாயத்துடன் சேர்த்துக் காய்ச்சிய பாலில் சிற்றுமணக்கெண்ணெய் கலந்து சாப்பிட்டு வரலாம். சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, விலாமிச்சை வேர், பர்படகம், வெட்டிவேர், சந்தனம், சிற்றுமுட்டிவேர், தண்ணீர் விட்டான், நன்னாரிவேர், இவைகளின் கஷாயத்தில் சர்க்கரையும் நெய்யும் சேர்த்தோ நெய்யும் தேனும் சேர்த்தோ, நெய்யும் இந்துப்பும் சேர்த்தோ சாப்பிட ஜ்வரத்துடன் கூடிய வாதரத்தம் தணியும்.

சீந்திற்கொடி 6 பங்கு, சிற்றுமுட்டிவேர் 4 பங்கு, தேவதாரு 2 பங்கு இவைகளின் கஷாயத்தில் சர்க்கரையும் ஜீரகத்தூளும், சேர்த்து அல்லது பாலும் சர்க்கரையும் அல்லது நெய்யும் ஜீரகத்தூளும் சேர்த்துச் சாப்பிட உடல் வலி மிகுந்த நிலையில் நல்லது. இது அமிருதோத்தரம் எனப்படும்.

சீந்திற்கொடி, சிற்றுமுட்டிவேர், இவை வகைக்கு 2 பங்கு. தேவதாரு, அரத்தை, கருங்குறிஞ்சி வேர், சிற்றுமணக்கின் வேர் வகைக்கு ஒருபங்கு, இவைகளின் கஷாயத்துடன் பால் சேர்த்துக் காய்ச்சி சர்க்கரை சேர்த்தோ கஷாயத்துடன் ஜீரகத்தூளும் நெய்யும் சேர்த்தோ சாப்பிட நல்லது.

அரத்தை, சிற்றுமணக்கு வேர், பூனைக்காலிவேர், கருங்குறிஞ்சி வேர், தேவதாரு, கச்சோரம், தண்ணீர் விட்டான், கோரைக்கிழங்கு, ஆடாதோடை வேர், நீர்முள்ளி வேர்; சுக்கு, சீந்திற்கொடி, அதிவிடயம், இவைகளின் கஷாயம் நெய்யும் நல்லெண்ணெய்யும் சேர்த்துச் சாப்பிட முழங்கால் தொடை, விலா, முதுகு, இடுப்பு, தாவடை இவைகளில் வலியுடன் காணும் வாதரோகங்களில் மிக நல்லது. ராஸ்னாதி கஷாயம் எனப்படும்.

அமிருதாதைலம். சீந்திற்கொடிச்சாறு அல்லது கஷாயம் 6¼ படி, வாழைப்பழம் அதிமதுரம், கோஷ்டம், கோரைக் கிழங்கு, தகரவிதை, சந்தனம், நன்னாரி, தாமரை கேஸரம், அமுக்கராக் கிழங்கு, திரிபலை, ஏலரிசி தாமரைத்தண்டு, மஞ்சிட்டி, நிலப்பனைக்கிழங்கு, கச்சோரம், ஜடாமாஞ்சி, கல்பாசி, மரமஞ்சள், லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ வெட்டிவேர், ஆலம்மொக்கு, அரசம்மொக்கு, அத்தி மொக்கு, இச்சி மொக்கு, விலாமிச்சைவேர், இலுப்பைப்பூ, நீலோத்பலக் கிழங்கு, கர்வி, கடுகுரோகிணி, அஞ்சனக்கல் இவை வகைக்கு ½ தோலா, நல்லெண்ணெய் அல்லது

தேங்காய் எண்ணெய் 128 தோலா, இவைகளைத் தைலமாகக் காய்ச்சி உபயோகிக்கலாம். நஸ்யம், அப்யங்கம் தாரை முதலிய வைகளுக்கும் உள்ளுக்குச் சாப்பிடுவதற்கும் நல்லது. கடுமையான வாதரத்தத்தில் மிகவும் நல்லது.

சந்தனமலகாதி தைலம். சந்தனம், நெல்லிக்காய், விலாமிச்சை வேர், அதிமதுரம் இவை வகைக்கு ஒரு பங்கு சீந்திற்கொடி 4 பங்கு இவைகளின் கஷாயம், மஞ்சிட்டி, கோஷ்டம், அதிமதுரம், சந்தனத்தூள், விலாமிச்சை வேர், வெட்டிவேர், இவை கல்கம், தேங்காய் எண்ணெய் நல்லெண்ணெய் சேர்த்துத் தயாரித்த தைலம் மிகவும் நல்லது.

முஸ்தாமிருதாதி தைலம். கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, சிற்றாமுட்டிவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகளின் கஷாயம், சந்தனம் விலாமிச்சைவேர், நன்னாரி, கோரைக்கிழங்கு, அதிமதுரம், கோஷ்டம், வெள்ளை லோத்ரப்பட்டை, சிற்றாமுட்டி வேர் இவை கல்கம், நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் எண்ணெய்க்குச் சமம் பால் சேர்த்துத் தயாரித்த தைலம் அப்யங்கம், தாரை முதலிய வெளியுபயோகத்திற்கும் உள்ளுபயோகத்திற்கும் நல்லது.

பிண்ட தைலம். நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்; நன்னாரி, வெள்ளைக்குங்கிலியம், மஞ்சிட்டி, தேன் மெழுகு இவை கல்கம் ஜலம் அல்லது சிற்றாமுட்டி கஷாயம் அல்லது காடி அல்லது நன்னாரி சீந்திற்கொடி கஷாயம் (எண்ணெய்க்கு நான்கு பங்கு) இவைகளைத் தைலமாகக் காய்ச்சி தலை தவிர மற்ற பாகங்களில் தேய்த்துவிட எல்லா வாதரத்த விகாரங்களையும் போக்கும்.

காரஸ்கர கிருதம். சேங்கொட்டை விதையை முளையும் காம்பையும் நீக்கிப் பாலில் அரைத்து நெய்யுடன் கலந்து காய்ச்சி எடுத்து மேல் தடவிவிட ரக்தஸ்தம்பம் நிற்கும். இதில் தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறும் சேர்த்துத் தயாரிக்க உள்ளுக்கும் சாப்பிடலாம்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS.
(REGD)
Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.
LUDHIANA. PUNJAB
ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.

செய்தி:

திருச்சி ஆயுர்வேத ஸபா.

30–4–59 மாலை 4-30 மணிக்கு திருச்சி ஆயுர்வேத ஸபா கட்டிடத்தில் ஆயுர்வேத ஸபாவின் மாதாந்தரக் கூட்டம் பண்டித ஸ்ரீ S. M. ஸௌந்தர ராஜாசார்யர் தலைமையில் நடந்தது.

அவ்வமயம் அன்று சர்ச்சைக்கு விஷயமான "கர்ப்பத்தடை" என்கிற விஷயத்தை வைத்ப ஸ்ரீ முத்துராமய்யர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். எல்லா வைத்யர்களும் சர்ச்சையில் விசேஷ பங்கெடுத்துக் கொண்டனர்.

வந்தனோபசாரத்துடன் மாலை 6-30 மணிக்கு கூட்டம் இனிது முடிவடைந்தது.

அனுபூத யோகங்கள்.

(வைத்யபூபதி, பிஷக்ரத்ன கவிராஜ் N. C. S. ராகவன், ஸ்ரீரங்கம்.)

மாந்தக்கஷாயம்

நல்லவேளைவேர், மேல்தோல் சீவின சுக்கு, மேல்தோல் போக்கிய வெள்ளைப் பூண்டு இதழ் வெந்தயம், வசம்பு, ஓமம் வகைக்கு விராகனிடை 1.

செய்முறை:- மண்பாண்டத்தை அடுப்பில் வைத்து அதில் வசம்பை நன்றாக நையத் தட்டிப் போட்டு எரித்து சாம்பலாக்கி வெண்ணிறமான சாம்பலான பின்பு வெந்தயத்தைப் போட்டு இள வறுப்பாக வறுத்து பிறகு வேளை வேரையும் வெள்ளைப் பூண்டு இதழ்களையும் தட்டிப்போட்டு இரண்டு நிமிஷம் கழித்து சுக்கையும் தட்டிப்போட்டு 1 ஆழாக்கு ஜலம் (8 அவுன்ஸ்) ஜலம் விட்டு இதை நான்கில் ஒருபாகமாக சுண்ட வைத்து இறக்கி வடிகட்டி எடுத்துக்கொள்ளவும்.

குறிப்பு:- இந்த கஷாயத்தை 1 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 3 வேளையாகக் கொடுக்கவும். 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அளவில் 2 பங்கு கொடுக்க வேணடும். 3 வயது முதல் பத்து வயது வரை மூன்று பங்காகவும், 10 வயது முதல் 16 வயது வரையில் நான்கு மடங்காகவும் கொடுக்கலாம். தவிர அளவை அதிகப்படுத்துவதும் குறைப்பதும் வியாதி பலம் தேகபலம் ஆகியவைகளை அனுசரித்துச் செய்ய வேண்டும்.

மேல் சொன்னபடி செய்து கொள்ளுவது அவசரகாலங்களில் கஷ்டமாக இருக்கும். ஆதலால் அம் மருந்தையே வாலையில் வைத்து திராவகமாக இறக்கி வைத்துக் கொண்டால் எந்த சமயத்திலும் உபயோகப் படுத்திக் கொள்ளலாம். சிறு குழந்தைகள் உள்ள குடும்பங்களில் இந்த திராவகம் அவசியம் இருக்க வேண்டியது.

மாந்தத் திராவகம் — ஷர்பத்து

வேளைவேர் தோல் தோல் உரித்த வெள்ளைப் பூண்டு, சுட்டெரித்த வசம்புச் சாம்பல், மேற்தோல் போக்கிய சுக்கு, வெந்தயம், ஓமம் வகைக்கு பலம் 10.

செய்முறை:— வேளை வேர்த் தோலை மண்பாண்டத்தில் போட்டு அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து லேசாக வதக்கவும். பிறகு வெள்ளைப் பூண்டு இதழ்களையும் சட்டியிற்போட்டு வதக்கி கொள்ளவும். பிறகு முறையே வெந்தயம், ஓமம் முதலியவை களை மணம் வரும் வரையில் இளம் வறுப்பாக வறுத்துக் கொள்ள வேண்டும். பிறகு இந்த 6 சரக்குகளையும் உரலில் போட்டு இடித்து 2 படி ஜலம் விட்டு வாலை யந்திரத்தில் வைத்து இரண்டு புட்டி திராவகமாக இறக்கிக் கொள்ளவும். இதையே சம எடை சர்க்கரை சேர்த்து ஷர்பத்தாகவும் செய்து கொள்ளலாம்.

அளவு:— திராவகத்தையும் ஷர்பத்தையும் குழந்தைகளுக்கு $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ அவுன்ஸ் வரையிலும், பெரியவர்களுக்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் முதல் 1 அவுன்சும் மற்றும் வியாதி பலம் தேகபலத்திற்கு தக்க வாறு கூட்டியும் குறைத்தும் கொடுக்கலாம்.

அனுபானம்:— இவைகளை தேன் வெந்நீர், தாய்ப்பால் முதலிய அனுபானங்களிலும் கொடுக்கலாம்,

உபயோகம்:— குழந்தைகளுக்கு ஏற்படும் அஜீர்ண ரோகங் கள், பால் கட்டு ரோகங்கள் அஜீர்ணத்தாலுண்டாகும் பல வகை பேதிகள், வயிற்று வலி, வயிறு உப்பிசம், வயிற்றுப் போக்கு எல்லாவகை மாந்தரோகங்கள் இவை நீங்கி ஜீரண சக்தி உண்டாகும்.

இந்த திராவகத்தையும் ஷர்பத்தையும் பிரதிதினமும் உப யோகித்துவர குழந்தைகள் வியாதியின்றி ஆரோக்யமாக இருப் பார்கள் என்பதில் சந்தேகமில்லை. குழந்தைகள் வியாதிகளுக்கு இந்த ஒரு மருந்தே போதுமானது.

உதிரவாயு லேகியம்

தோல் போக்கிய வெள்ளைப் பூண்டு இதழ் பலம் 2, மேல் தோல் போக்கி சிறு பில்லைகளாக நறுக்கிய இஞ்சி பலம் 2, பனை வெல்லம் பலம் 5, நெய் தேவையான அளவு.

செய்முறை:— ஒரு பாண்டத்தை அடுப்பில் ஏற்றி அதில் தேவையான நெய்யை விட்டு நெய் கொதித்த பின்பு வெள்ளைப் பூண்டு இதழ்களைப் போட்டு சிவந்த பதத்தில் எடுத்துக் கொள்ள வும் பிறகு இவைகள் இரண்டையும் உரலில் போட்டு மை போல் இடித்து எடுத்து அம்மியில் வைத்து பனைவெல்லத்தையும் சேர்த்து மெழுகு பதமாகிற வரையில் அரைத்து பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:— 1 முதல் 2 விராகனிடை வரையில் காலை-மாலை இரண்டு வேளை அல்லது 3 வேளைகள் உபயோகிக்கலாம்.

உபயோகம்:— சூதகக்கட்டு, சூதக வாயு – அக்கிரம சூதகம், சூதக காலங்களில் உண்டாகும் வயிற்றுவலி, மற்றும் சூதக சம்பந்தமான அனேக வியாதிகளை நீக்கும் இதை வீட்டுக்கு விலக்கமாவற்கு 1 வாரம் அல்லது 10 நாள் முன்னதாக ஆரம்பித்து உபயோகித்துவர கருப்பையிலுள்ள வாயு ரோகங்கள் நீங்கி சூதகமானது கிரமமாகும்.

பத்தியம்:— வாழைக்காய், உருளைக்கிழங்கு, கெண்டை மீன், புருஷ சம்பந்தம் நீக்க வேண்டும்.

மேகநாதி சூர்ணம்

நிழலில் உலர்த்தின வெள்ளருகுச் சூர்ணம். சங்கம் வேர் பட்டைச் சூர்ணம் கோரைக்கிழங்கு சூர்ணம் நிழலில் உலர்த்தின கஞ்சாங்கோரைச் சமூலச் சூர்ணம் முடக்கற்றான் வேர்பட்டைச் சூர்ணம் குரிஞ்சா வேர்பட்டைச் சூர்ணம் நிழலில் உலர்த்தின கரிசிலாங்கணி சமூலச் சூர்ணம் சிவனார் வேம்புச் சூர்ணம் இவைகள் வகைக்கு பலம் 1. சீனி சர்க்கரை பலம் 8.

செய்முறை:— மேற் கூறியவைகளை யெல்லாம் தனித்தனி இடித்துச் சூர்ணித்து சலித்து பிறகு எல்லா சூர்ணங்களையும் ஒன்ருகச்சேர்த்து பிறகு சர்க்கரையையும் சேர்த்து கலந்து 1 மணி நேரம் கலுவத்தில் அரைத்துப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:— விராகனிடை 1 முதல் 2 வரை.

உபயோகம்;— பிரமேகம், கை கால் எரிச்சல், மேகரோகங்கள், வெடிசூலை, சூலை. எலிகடி விஷம், பூரான்கடி விஷம், காணுக்கடி விஷம முதலியவை தீரும்.

பத்தியம்:— எலிகடி முதலிய விஷகடிகளில் விஷம் பலமாக இருந்தால் உப்பில்லா பத்தியம் இருக்க வேண்டும். மேக ரோகங்களுக்கு – புகை, புளி இவைகளை நீக்கவும்,

பச்சைக் களிம்பு

சுத்திசெய்த ரஸம், வங்காளபச்சை (Copper acetate) வெள்ளை குங்கிலியத்தூள் இவைகள் வகைக்கு விராகனிடை 3, ஊமத்தை இலை ரஸம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:— முதலில் ரஸத்தை கலுவத்திலிட்டு ஊமத்தை யிலை ரஸத்தை விட்டு சிறுகச்சிறுக வார்த்தரைத்து ரஸம் மடிந்த பின்பு வங்காளப்பச்சை, குங்கிலியத் தூள்களையும் முறையே ஒன்றன் பின் ஒன்ருகச் சேர்த்து 2 ஜாம நேரமரைத்து இதனை யெடுத்து ஒரு வெங்கலப் பாத்திரத்தில் போட்டு வெண்ணை தேவையானது சேர்த்து பிறகு தாம்ரப் பாத்திரத்தினால் 2 ஜாம நேரம் மறுபடியும் அறைத்து பத்திரப் படுத்தவும்.

உபயோகம்:— இந்த களிம்பை வெற்றிலையில் தடவி போட புற்று ரணங்கள், கிரந்திப்புண்கள், புறையோடும் புண்கள், ஆருத ரணங்கள், நாட்பட்ட ரணங்கள் தீரும். இந்த களிம்பை துணியில் தடவி திரியாக செய்து கொளுத்தி புகை பிடிக்கவும் செய்யலாம்.

சித்திரமூலக் குளிகை

சித்திரமுலவேர்பட்டைச் சூர்ணம், சுத்தி செய்த ரஸகர்பூரம், ஓமச்சூர்ணம் இவைகள் வகைககு விராகனிடை 1½, பனை வெல்லம் விராகனிடை 4.

செய்முறை;— முதல் மூன்று சூர்ணங்களையும் கல்வத்தில் போட்டு 1 மணிநேரம் அறைத்து பிறகு பனைவெல்லத்தையும் சேர்த்து 6மணி நேரம் அறைத்து மிளகு பிரமாணம் மாத்திரை கள் செய்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:— மாத்திரை 1 முதல் 2 வரையில்

அனுபானம்:— சீனிச்சர்க்கரை, வெண்ணை, சுக்குவிழுது.

உபயோகம்:— இதை காலை மாலை 2 வேளையும் 10 நாள் உபயோகித்தால் பற்பல ரணங்கள், கிரந்தி ரோகங்கள், யோனிப் புற்று, சூலைகள், கள்ளிப்பூ கிரந்தி லிங்கப்புற்று பகந்தர ரோகங் கள், கன்னப்பிளவை, பக்கப்பிளவை, மார்சிலந்தி, வித்ரதி, மேக ரணங்கள், அஷ்ட குன்ம ரோகங்களும் தீரும்.

பத்தியம்:— புளி நீக்கி உப்பை வறுத்துச் சேர்க்கவும், புகை, பெண், இவைகளை நீக்க வேண்டியது. வியாதி பலம் தேக பலம் இவைகளுக்கு தகுந்தபடியும் வியாதிக்குத் தகுந்த பத்தியமும் வைக்க வேண்டும்.

குறிப்பு:— இது அதிக உபயோகமான மருந்தானாலும் சில சுகுமாரதேகிகளுக்கு அதிகம் உபயோகப்படாது. ஆகையால் மருந்துடன் கோரோசனை 1½ விராகனிடை சேர்த்துச் செய்து கொண்டால் எல்லா தேகிகளுக்கும் உபயோகப்படும்.

ஆசார்ய ஸ்ரீ பண்டித

நாராயணய்யங்கார் ஸ்வாமி

(சென்ற மாதத்தொடர்ச்சி.)

இரண்டாம் முறை காசியிலிருந்து திரும்பிய ஸ்ரீ நாராயண அய்யங்கார் நெரூர் வந்து சேர்ந்தார். பல ஆண்டுகள் கல்வி பயின்ற போதிலும் திட்டமாக ஒரு தொழிலுக்குத் தக்கபடி தயாரித்துக் கொள்ளவில்லை. இச்சமயம் சோழவந்தானில் ஸ்ரீ விச்வநாத அய்யருடைய குடும்பத்தில் ஒருவருக்கு வைத்யம் செய்ய வேண்டும் என அழைக்கப்பட்டதால் ஸ்ரீ நாராயணய்யங்கார் குடும்பத்துடன் சோழவந்தானில் வந்து சில ஆண்டுகள் தங்கினார்கள். இந் நிகழ்ச்சியே அவரை வைத்தியத்தை ஒரு தொழிலாக மேற்கொள்ளத் தூண்டிய நிகழ்ச்சியாகும். இவருக்கு சுமார் 29 வயது நிறைந்த பொழுது இவரது தகப்பனாருக்கு உடல் நலம் குன்றியது. ஆகவே சோழவந்தானை விட்டு மறுபடியும் நெரூரில் குடியேறினார்கள். தகப்பனாரின் பக்கத்தில் இருந்து வேண்டிய சுச்ருஷைகளைச் செய்து வந்தார். இவரது தகப்பனார் இவருடைய 29வது வயதில் காலமானார். பிறகு நெரூரிலேயே தங்கி விவசாயத்தை கவனித்து வந்தார்.

சிறிது காலம் சென்ற பின் மதுரையில் பிரபல வக்கீலான ஸ்ரீ K. R. வெங்கடராம அய்யர் ஒரு தீராத வியாதியால் பீடிக்கப் பட்டு, அவருக்கு வைத்யம் செய்ய வேண்டுமென அழைக்கப் பட்டதால் மறுபடியும் மதுரையில் சென்று வசித்துவந்தார்கள், 1920ல் இவருடைய தாய் நோய்வாய்ப்பட்டதால் மறுபடியும் நெரூர் வந்து தங்கி தாயாரின் அந்திமக் கிரியைகளை முடித்தபின் மறுபடியும் மதுரைக்குச் சென்றார். இக்காலத்தில் சிறிது காலம் இவர் கரூரில் தங்கி வக்கீல் ஸ்ரீ N. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் போன்ற சில வைணவப் பிரமுகர்களுக்கு வேதாந்த பாடம் சொல்லி வைத்ததுண்டு. இவர் மதுரையில் தங்கியிருந்த பொழுது இந்திய வைத்திய முறையைப் பற்றி ஆராய்ந்து சிபார்சு செய்ய சென்னை அரசாங்கம் சர். முகமது உஸ்மான் அவர்கள் தலைமையில் ஒருகுழுவை நியமித்தது. அக் குழுவின் முன் சாட்சிய மளிக்குமாறு அழைக்கப்பட்டவர்களுள் இவரும் ஒருவர். இக் குழுவின் சிபார்சுகளின் மீதே இந்திய வைத்திய முறைக்குச் சென்னையில் ஒரு வைத்தியக் கல்லூரி ஏற்பட்டது.

1924-ல் மதுரையில் பிளேக் நோய் பெருவாரியாகப் பரவியது. அச்சமயம் மதுரையை விட்டு ஸ்ரீ நாராயணய்யங்கார் குடும்பத் துடன் மறுபடியும் நெரூரில் குடியேறினார்கள். சில நாட்களே தங்க வேண்டுமென வந்த அவர் அங்கு சில ஆண்டுகள் தங்கும்

படியாயிற்று. அவர் நெரூருக்கு வந்த சில மாதங்களில் காவிரி யாற்றில் பெரு வெள்ளம் கண்டது. அதன் பயனாய் நெரூர் கிராமம் நாற்புறமும் நீரால் சூழப்பட்டது. பெரும்பாலான வீடுகள் நீரில் மூழ்கின. இவர் க்ருஹம் மட்டும் மிகப்பெரியது; உயர்ந்த கட்டிடம்; ஆகவே அதுமட்டும் வெள்ளத்திலிருந்து தப்பியது. வெள்ளம் வடிந்த பிறகு சாகுபடி நிலங்கள் மணல் அடித்துப் பாழாயின. வியவசாயிகள் பெரும் தொல்லைக்கு ஆளானார்கள். இவருடைய நிலங்களும் சீர்கேடு அடைந்தன. நிலத்தைச் செப்பனிடுவதில் அவர் தீவிரமாக முனைந்தார். அத்துடன் வெள்ளத்தின் போக்கு நெரூர் வாய்க்காலையும் மதகுகளையும் அழித்து விட்டது. அதைச் செப்பனிடும் வேலையை ஸ்ரீ நாராயண அய்யங்காரே மேற்கொள்ள வேண்டும் என கிராமத்தினர் விரும்பினர். அதற்கிசைந்து பல மாதங்கள் கடுமையாக உழைத்து வாய்க்கால் வெட்டும் வேலையை மேற் பார்வையிட்டு வெகுவிரைவில் வேலையை முடித்தார். இதே சமயம் குடும்பத்திலும் அவருக்கு தொல்லையேற்பட்டது. அவருடைய சகோதரரில் ஒருவர் சைனியத்தில் சேர்ந்து முதல் உலக யுத்தத்தில் பணியாற்றி பம்பாயில் இருந்து வந்தார். அவருக்குக் கடுமையான மலேரியா சுரம் கண்டதால் ஸ்ரீநாராயண அய்யங்கார் பம்பாய் சென்று அவரை நெரூர் அழைத்துவரும்படி நேரிட்டது. பல மாதங்கள் அவரைத் தன்னுடன் வைத்திருந்து உடல் நலம் பெற்ற பிறகு அவருக்கு திருமணத்தையும் செய்து வைத்தார். பிறகு கரூரில் தங்கி வைத்யத் தொழிலில் ஈடுபடலானார்.

அவர் கரூரில் தங்கியிருந்த பொழுது தான் முதலாவதாக அவரிடம் கட்டி வைத்யரும் மகா பண்டிதருமான ஸ்ரீ ராமசர்மா அவர்களும். வைத்திய வெங்கட்ராம அய்யர் அவர்களும் ஆயுர்வேதம் அவரிடம் கற்றனர். இதன் விளைவாக அவருக்கு ஸ்ரீ ராமசர்மா அவர்களின் அத்தியந்த நட்பு இறுதி காலம் வரை கிட்டியது.

1926ல் ஆசார்ய ஸ்ரீ பண்டித நாராயணய்யங்காருடைய நண்பர்கள் மறுபடியும வற்புறுத்தி மதுரை வருமாறு அழைத்தனர். ஆகவே 1926ல் திரும்பவும் அவர் மதுரையில் குடியேறினார். அதிலிருந்து 1954ல் திரும்பவும் அவர் கரூர் வந்த வரை 28 ஆண்டுகள் தொடர்ந்து மதுரையிலேயே இருந்து வந்தார்.

மதுரையில் அவர் தங்கியிருந்த காலத்தில் அவர் ஆயுர் வேதத்திற்குச் சிறந்த தொண்டு ஆற்றி வந்தார். இவரிடம் பொறுக்கி யெடுத்த நோயாளிகளே வைத்தியத்திற்கு வருவர். ஆயுர்வேதத்தில் நம்பிக்கையுள்ளவர்களும் நல்ல பண்புள்ளவர்களுமே இவரிடம் வருவர். இவருடைய சிகித்ஸை முறை ஓரளவு

ராஜ வைத்தியமே. முன்பின் அறியாதவர்களிடம் பணம் பெற்று வைத்யம் செய்யமாட்டார். தனவந்தர்களிடமே பணம் பெற்று வைத்தியம் செய்வது வழக்கம். அதே சமயம் மீனாக்ஷி தர்ம வைத்தியசாலை யென ஒரு ஸ்தாபனத்தை நிறுவி ஏழைகளுக்கு இலவசமாகவே வைத்யம் செய்வது இவரது முறை,

இவர் காசி உமா சரண கவிராஜ் அவர்களிடம் சுத்த ஆயுர் வேதம் கற்றவரானதால் இவர் சுத்த ஆயுர்வேதத்தில் தீவிர பற்றுடையவராக இருந்தார். பணத்தைப் பொருட்படுத்தாது ஏராளமான செலவில் காஷ்மீரம் அமிருதசரஸ் போன்ற இடங் களிலிருந்து மூலிகைகளையும் மருந்து வகைகளையும் தருவித்து புதுமுறைகளில் பரிசோதனை செய்து கொண்டே யிருப்பார். இது போன்ற இரசாயன ஆராய்ச்சி இவரது வீட்டில் என்றும் நடந்து கொண்டே யிருக்கும்.

அதே சமயம் இவர் ஆங்கில வைத்ய நூலையும் நன்கு கற்று அறிந்தவர். ஆங்கில சிகித்ஸா முறைகளையும் நடைமுறையில் ஆராய்ந்து அதற்கும் ஆயுர்வேத முறைகளுக்கும் உள்ள தார தம்யங்களை அறிந்தவர். ஆகவே மதுரைப் பகுதியில் உள்ள மேல் நாட்டு முறை வைத்யர்களுக்கு இவரிடம் ஒரு தனி மதிப்பு உண்டு.

மதுரைக்கு வருவதற்கு முன் 1925ல் இவர் கரூரில் தங்கி யிருந்த பொழுதே ஆயுர்வேத தத்துவங்களை மக்களிடம் பரப்ப வேண்டும் என எண்ணங்கொண்டார். பெரும்பாலான ஆயுர் வேத புஸ்தகங்கள் அக் காலத்தில் வடமொழியில் இருந்தன. வடமொழி நன்கு கற்றறியாத ஆயுர்வேத வைத்யர்கள் பலர் இருந்தனர். இவர்களுக்கும் உதவ வேண்டும் என்பது அவரது எண்ணம். ஆகவே இவர் கரூரில் "வைத்ய சந்திரிகை" என்ற ஒரு மாதாந்தர சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்தார் இப் பத்திரிகைக்கு வைத்ய உலகில் பெரும் அளவு ஆதரவு இருந்து வந்தது. இருப்பினும் பொருள் துறையில் அதிக வசதி இல்லாத தால் பல ஆண்டுகள் ஸ்ரீ நாராயண அய்யங்கார் அவர்களே பத்திரிகையின் நடைமுறைச் செலவுகளைச் சரிக்கட்ட வேண்டி யிருந்தது. இருப்பினும் தளராது அதை நடத்தி வந்தார். இரண்டாவது உலக யுத்தத்தின் போது காகிதக் கட்டுப்பாடு போன்ற பல இன்னல்களுக்கு இடையிலும் அப்பத்திரிகை ஒழுங்காக வெளி வந்தது. கடைசியாக ஸ்ரீநாராயண அய்யங் கார் விருத்தாப்பிய தசையில் தொடர்ந்து நடத்த சிரமப்பட்டு அப்பத்திரிகையை நல்ல நிலையில் 1946ல் திராவிட வைத்ய மண்டலம் ஏற்று நடத்த சம்மதித்ததால் அதனிடம ஒப்படைத் தார். அப்போதும் சில ஆண்டுகள் அதற்கு அவரே ஆசிரியராக

வும் தொண்டு புரிந்து வந்தார். ஆயுர்வேதத்திற்கு இவ்வித சேவை வெகு சிலரால் தான் செய்ய முடியும்.

ஆசார்ய ஸ்ரீ நாராயணய்யங்கர் தமிழிலும் சிறந்த எழுத்தாளர் ஆகவே வைத்ய சந்திரிகையின் வாயிலாக ஔஷதசாரம். யோக ரத்னகரம், வைத்திய சாரம், ஸஹஸ்ரயோகம், சித்தர்முறை. காய கல்பம், போபதேவசதகம் முதலிய பல நூல்கள் அவரால் வெளி யிடப்பட்டு இன்றும் ஆயுர்வேத உலகில் பயன்பட்டு வருகின்றன.

ஸ்ரீ நாராயணய்யங்கார் திராவிட வைத்ய மண்டலத்திலும், அகில இந்திய ஆயுர்வேத மண்டலத்திலும் பல தடவைகள் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள். மதுரையில் திராவிட வைத்திய மண்டலத்தின் பிரிவை ஏற்படுத்தி பல ஆண்டுகள் அதன் தலைவராகவும் செயலாற்றியுள்ளார். இரு முறைகள் மதுரையில் திராவிட வைத்திய மண்டலத்தின் வருடாந்தரக் கூட்டங்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தானே முன் நின்று நடத்தியுள்ளார். அகில இந்திய ஆயுர்வேத மண்டலத்தின் ஆண்டுக் கூட்டம் ஒன்றையும் மதுரையில் சிறப்பாக நடத்தினர். திராவிட வைத்திய மண்டலக் கூட்டத்திற்கு பல சமயங்களில் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

இவருக்கு வேதாந்த ஆராய்ச்சியிலும் ஈடுபாடு அதிகம். மதுரையில் எவ்வகை வேதாந்த சர்ச்சைகள் நடப்பினும் ஸ்ரீ நாராயணய்யங்கார் அவர்களே நடுநாயகமாக விளங்குவார். விசிஷ்டாத்வைதத்தில் சிறந்த ஞானம் இவருக்கு உண்டு. இவர் மதுரை சென்றவுடன் வேதாந்த தேசிகன் பக்த சபை ஒன்று அமைத்து பல ஆண்டுகள் அதன் தலைவராகப் பணியாற்றி வந்தார். அச்சமயம் மதுரையில் உள்ள வைணவர்கள் பலர் இவரிடம் விசிஷ்டாத்வைதம் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

இவர் மதுரையில் இருந்த போது ஒரு சமயம் பண்டிட் மதன் மோகன் மாளவியா மதுரைக்கு வந்தார்கள். அவர் அரசியல் காரியமாக மதுரை வந்த போதிலும், ஸ்ரீ A. வைத்தியநாத அய்யருடைய தூண்டுகோலால் ஸ்ரீ நாராயணய்யங்கார் அவரைச் சந்தித்து ஸம்ஸ்கிருதத்திலேயே சம்பாஷித்தார். ஸ்ரீ மாளவியா அவர்கள் வடமொழியில் சிறந்த பண்டிதர். அவரிடம் ஸ்ரீ நாராயண அய்யங்கார் ஸ்வாமியை அறிமுகப் படுத்திய போது ஸ்ரீ வைத்தியநாத அய்யர் அவர்கள் ஒரு சிறந்த ஆயுர்வேத வைத்தியர் என்றே அறிமுகப் படுத்தினர். இது அய்யங்கார் அவர்களுக்கு பெரும் குறை. தன்னுடன் வேதாந்தத்தில் மாளவியா அவர்கள் இதனால் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விட்டதே என்று அடிக்கடி கூறுவதுண்டு.

இவர் மதுரையில் தங்கியிருக்கும் போது ஏற்பட்ட மற்றெரு நிகழ்ச்சியையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒரு வருடம் உபாகர்மம் நடத்த வேண்டிய தினம் பற்றிய சர்ச்சை பலமாக ஏற்பட்டது. பண்டிதர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு இரண்டு தினங்களில் உபாகர்மம் செய்யும் நிலை ஏற்பட்டது. மதுரையில் உள்ளவர்கள் ஸ்ரீ நாராயணய்யங்கார் ஸ்வாமியின் அபிப்பிராயத்தைக் கலந்து ஒரு குறிப்பிட்ட தினத்தில் செய்வதெனத் தீர்மானித்தனர். அச்சமயம் பிரம்மஸ்ரீ தேதியூர் சுப்ரமணிய சாஸ்திரிகள் மதுரையில் வசித்து வந்தார்கள். அவர் உபாகர்மம் வேறு ஒரு தினத்தில் செய்யப்பட வேண்டும் எனக் கூறினர். இச் சிறிய வேற்றுமை பெரியதொரு சர்ச்சையாக மூண்டது. உபாகர்ம விதிகளைப் பற்றிய ஆராய்ச்சிகளும் விவாதங்களும் வடமொழியில் அச்சிடப்பட்டு வெளியாயின. நூற்றுக் கணக்கான ரூபாய் செலவழிந்த போதிலும் ஸ்ரீ நாராயணய்யங்கார் ஸ்வாமி வெகு அழகாக ஸம்வாதத்தில் ஈடுபட்டார். இது வரை இவரை ஏதோ "சுக்குத் திப்பிலி" வைத்தியர் என்று கருதி வந்த ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரியார் போன்றவர்களுக்கு அவருடைய பாண்டித்தியம் வெளியாயிற்று.

இதே போல வைணவ சம்பிரதாயத்தில் இவருக்கும் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் அவர்களுக்கும் வாக்குவாதம் நிகழ்ந்தது. பொதுவாக மத சம்பந்தமான சர்ச்சைகளில் குறுகிய நோக்கத்துடன் ஈடுபடுவது இவரது வழக்கமல்ல. ஆனல் காலவசத்தால் ஏதாவது ஒரு சர்ச்சையில் ஈடுபட்டால் காலத்தையும், பொருளையும் பாராது எடுத்த நிலையை சாதிக்கும் வரை ஈடுபடக்கூடிய ஆற்றல் இவரது விசேஷ குணமாகும்.

இவருடைய 65-வது வயதில் மூன்ருவது முறை காசி, கயை போன்ற வடநாட்டு ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லும் வாய்ப்பு கிட்டியது. இச்சமயம் இவரது மனைவியும் கூடச் சென்ருர்கள். விருத்தாப்பிய தசையில் இருந்தபோதிலும் இவரை இந்த யாத்திரையில் அழைத்துச் சென்று வந்தது ஸ்ரீ ராமசர்மா அவர்களே.

1954-ஞு தை மாதம் ஸ்ரீ நாராயணய்யங்கார் அவர்கள் மறுபடியும் கரூரில் குடியேறினர்கள், மதுரையை தனது இரண்டாவது பிறப்பிடமாகக் கொண்டு அங்கு பல நூற்றுக்கணக்கான நண்பர்களைப் பெற்ற இவருக்கு அங்கிருந்து வருவது சற்று கிலேசமாகத்தான் இருந்திருக்க வேண்டும். கரூரில் இவரது குமாரர்கள் இருந்ததால் அங்கேயே கடைசிகாலத்தைக் கழிக்கும் உத்தேசத்துடன் வந்து சேர்ந்தார்கள். கரூர் வந்தது முதலே இவரது உடல் நிலை சரியில்லை. ஓரளவு இருதய நோயால் தொல்லைப்பட்டு

வந்தார்கள். வீட்டைவிட்டு வெளியேறுவிடினும் எப்பொழுதும் ஓய்ந்திருக்கமாட்டார். ஏதாவது படித்தபடியே இருப்பார். எப்பொழுதும் பலருடனும் ரசமான பல விஷயங்களைப் பற்றி சம்பாஷித்துக் கொண்டே இருப்பார். வைத்யத்துறையிலும், வைதிகத் துறையிலும் இவருக்கு ஆர்வம் இருந்தது போலவே அரசியலிலும் இவருக்கு நல்ல அனுபவம் உண்டு. ஆகவே அன்றாடம் பத்திரிகைகளைப் படித்து நண்பர்களுடன் சர்ச்சை செய்வதுண்டு. இவரது கண்பார்வை மங்கி வந்ததால் படிக்க முடியாமற் போயிற்று. ஆகவே உடல் நிலை மோசமாயிருப்பினும் இரு கண்களுக்கும் ஆபரேஷன் செய்து கொண்டார். நல்ல பார்வை கிட்டி படிக்கவும் முடிந்தது. ஓரிரு மாதங்கள் நன்கு படித்தும் வந்தார். இருதயக் கோளாறினால் மாசி மீ 23வ ஞாயிறு இரவு சற்றும் எதிர்பாராத நிலையில் இறைவன் திருவடி அடைந்தார்.

பந்து பரிபாலனத்திலும் விருந்தினர்களை உபசரிப்பதிலும் ஆசார்ய ஸ்ரீ பண்டித நாராயணய்யங்கார் ஸ்வாமியைப் போன்றவர்கள் வெகு சிலரே. இவரது வீட்டில் எப்போதும் விருந்தினர் வந்துகொண்டேயிருப்பர். அவர்களை உபசரிப்பதில் இவருக்கு அலாதியான பிரீதி.

அந்திய காலத்தில் ராமசர்மா அவர் மனதுக்கு ஹிதமாக நடந்து பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள நேர்ந்தது ராமசர்மாவுக்கு ஏற்பட்ட பெரிதான பாக்யமாகும். ஆயுர்வேத சாஸ்திரத்தில் மட்டுமல்லாமல் பல விஷயங்களிலும் அறிவு அடைய நேர்ந்ததைக் குறித்து ஸ்ரீ ராமசர்மாவும் பெருமைப் படுகிறார்.

ஸ்ரீரங்கம் லக்ஷ்மீ ப்ரஸந்ந ஸ்ரீ வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

ஏப்ரல் மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

ஆண்கள்	602	1496
பெண்கள்	570	
சிறுவர்	324	

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்.
ராயபாளையம் எஸ்டேட்.

பார்ச்வ சூலம்.

(ஆசார்ய ரணஜிதராய், ஸூரத்.)

[பார்ச்வ சூலம்—ஜாதோத்க நிலை என்ற தலைப்பில் ஸசித்ர ஆயுர்வேத பத்திரிகையில் ஸ்ரீமான் ராய் அவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரையின் சுருக்கத்தை இங்கு தருகிறோம். ஆசிரியரின் ஆராய்வுத் திறனை சந்திரிகை வாசகர்கள் நன்கு அறிவார்கள். மூல கிரந்தங்களின் விவரணத்தில் இவர் கடைபிடிக்கும் தனிவழி விஷயத்தை புதிய முறையில் விளக்குவதில் நிகரற்று விளங்குகிறது — ஆசிரியர்.]

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்திலேயே இதில் குறிப்பிட விரும்பும் விஷயங்களின் சாரத்தைத் தொகுத்துத் தரவிரும்புகிறேன். அவையாவன—

1. ஹிருதயத்திற்கும் புப்புஸத்திற்கும் சுற்றியிருக்கும் சவ்வுகள் ச்லேஷ்மதர கலைகள் எனப்படுபவை. அவைகளின் நடுவில் உள்ள திரவம் ச்லேஷக கபம் எனப்படுவது.

2. ஆமவாதத்தில் எலும்புப் பூட்டுகளில் ஏற்படுவதைப் போல ஹிருதயத்திலும் ஏற்படும் கெடுதிகளைப் பற்றிய ஆயுர்வேத வழியிலுள்ள விவரணம்.

3. காச்யப ஸம்ஹிதையில் பார்ச்வசூலத்தின் லக்ஷணமாகக் குறிப்பிட்டுள்ள சில குறிகள் டிரைப்ளூரிஸி, வெட்ப்ளூரிஸி (Dry Pleurisy and wet Pleurisy) நோய்கள ஏற்பட்டதன் அறிகுறிகளாகும்.

4. கபஜஹிருத்ரோகம் என்பது நவீனர்களின் pericarditis with effusion ஆக இருக்கலாம்.

ஒன்றுக்கொன்று தொடர்பற்று இருப்பது போன்ற இந்த விஷயங்கள் எவ்வளவு தொடர்புள்ளன என்பதை இங்கு கவனிப்போம்.

ஹிருதயத்திலும் புப்புஸத்திலுமுள்ள ச்லேஷ்மதராகலைகள் :— ச்லேஷ்மதரா கலைகளைப் பற்றி ஸுச்ருதர் கூறும் லக்ஷணம் பின்வருமாறு—" ஏழு கலைகளின் நான்காவது ச்லேஷ்ம (கப) தராகலா. இதில் ச்லேஷகம் எனும் கபம் இருக்கிறது. ஒரு தேரின் அச்சில் எண்ணெய் போடுவதால் சக்கரங்கள் சரியாக உருளவும் சக்கரத்தில் ஏற்படும் அதிர்ச்சிகள் ரதத்தைப் பாதிக்காமலும் இருப்பது போல ஆங்காங்கு பூட்டுகளில் ச்லேஷகம் எனும் கபமுள்ள இந்த சவ்வு (கலை) பூட்டுகள் சிரமமில்லாமல் அசையவும், திடமாக இருக்கவும் உதவும்."

188876

இப்பூட்டுகள் எலும்புக்கும் எலும்புக்குமாகத்தான் இருக்க வேண்டுமென்று ஸுச்ருதர் கூறவில்லை. ஒரு அவயவமும் மற்றோர் அவயமும் உரையாது தனித்து இயங்கவும் தன்னளவிலே பிரிந்து சுருங்கவும், ஒன்றுக்கொன்று இடித்துக் கொள்ளாமலுமிருக்க நடுவிலே உதவும் ஓர் சவ்வு எனப் பொருள் தான் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நோக்கில் ஹிருதயத்திற்கும் புப்புஸத்திற்கும் நடுவிலுள்ள Pericardium என்ற சவ்வும், புப்புஸத்திற்கும் விலா வெலும்புகளுக்கும் நடுவேயுள்ள Pleura என்ற சவ்வும் ச்லேஷ்ம தராகலை என்பதிலும் அதனுள் உள்ள திரவம் ச்லேஷகபம் என்பதிலும் ஐயமில்லை.

பூட்டுகள் (ஸந்திகள்). இந்தச் சொல்லால் எலும்புகளின் பூட்டுகளைத்தான் அதிகமாகக் கொள்வது வழக்கம். எனினும் தசைகள், தசைநார்கள், ரத்தக் குழாய்கள் முதலியவைகளின் ஸந்திகளையும் ஸந்தியெனக் குறிப்பிடுவது உண்டு. இந்த நோக்கில் ஹிருதயம்-புப்புஸம்-விலா எலும்புக் கூடு இவைகள் சம்பந்தப் பட்ட சில நோய்களை இங்கு ஆராய்வோம்.

ஹிருதயம். இதற்குப் பொதுவாக ஹிருதயம் என்ற பிரதான ஆசயத்தின் பொருள் எனினும், ஆயுர்வேத வியவஹாரத்தில் ஹிருதயத்திலிருந்தும் வெளிக்கிளம்பும் ரத்தக் குழாய்களையும் உள் வந்து சேரும் ரத்தக் குழாய்களையும் சேர்த்து ஹிருதயம் என்று கூறுவது வழக்கம். தேர் சக்கரத்தின் ஆரங்களுடன் கூடிய நடுக்குடம் போல ஹிருதயம் கேந்திரமாக இருந்து உடலைத் தாங்குகின்றது என்றுதான் ஹிருதயத்தின் விளக்கம் ஆங்காங்கு காணப்படுகின்றது. அதனாலேயே நாபி-(தொப்புள் போன்ற நடுபாகம்-சக்ரத்தின் நடுக்குடம் சக்ர நாபி) என்ற பெயரும் ஹிருதயத்திற்கு வியவஹாரத்திலுள்ளது. அதனால் ரத்தக் குழாய்களுடன் கூடிய ஹிருதயத்தையே இங்கு ஹிருதய சப்தத்தால் குறிப்பிடுகிறோம்.

ஆமம். ஆமவாதத்தைப் பற்றிக் குறிப்பிடு முன் ஆமம் என்பது என்ன என்று விவரிக்க வேண்டியது அவசியம். ஜீர்ணம் செய்யும் அக்னியின் பலக்குறைவால் பாதி பக்குவமாகவோ முழுதும் அபக்குவமாகவோ உள்ள உணவுப் பொருளை ஆமம் என்கிறோம். ஆனால் இங்கிலை ஆமாசயத்திலும குடலிலும் நோயை உற்பத்தி செய்ய முடியலாம். உடல் முழுதும பரவி நோயை உற்பத்தி செய்யும் தகுதி எங்ஙனம் இதற்கு ஏற்படுகின்றது என்ற கேழ்வி எழலாம். ஏனெனில் பக்வமான உணவிலிருந்து உள் உறுஞ்சப்படும் ரஸம் ஸூக்ஷ்மமான படியால் ரஸாயனிகளின் ஸூக்ஷ்ம த்வாரங்கள் வழியே உட் செல்லமுடியும். அபக்வமான உணவு அவ்வளவு ஸூக்ஷ்மமாயிருக்காததலால் ரஸா

யனிகளின் வழியே உட்செல்லாது. ஆனால் அதே ஆமம் புளித்து விட்டால் விஷமாக மாறி விஷத்தின் குணத்தை மேற்கொண்டு உடல் முழுதும் பரவும். ஆனால் ஆமவாதத்தில் இவ்விதம் குடலில் புளிப்போ, விஷநிலேயோ ஏற்படுவதில்லே. அதனால் ஆமவாதத்தில் குறிப்பிடப்படும் ஆமம் அபக்வமான உணவைக் குறிப்பிடுவதில்லே எனக் கொள்ளவேண்டியிருக்கிறது. இதற்கான ஆதாரத்தை சரகர் கிரஹணி சிகித்ஸையில் வெளியிடுகிறார். ஆமம் பக்வம் என்ற நிலே மூன்று இடங்களில் உண்டாகின்றது. ஆமாசயத்திலும் பச்யமாருசயத்(சிறுகுடல்) த்திலும் ஏற்படுவது பக்வாசய (பெருகுடல்) த்தில் ஏற்படுவது, சரீரத்தில் ஏற்படுவது என மூன்ருகப் பிரித்துள்ளார். ரஸதாதுவாக உறுஞ்சப்பட்டு உட்சென்ற ஆகார ஸத்து, உள் ரத்தம் முதலிய தாதுக்களாக மாறுவதில் தாத்வக்னிகளின் பலக்குறைவால் தடைபட்டு அங்கு ஆமமாகத் தங்கிவிடுகின்றது. இவ்விதம் ரஸம் ஆமமாக நின்ருல் ஆமாசய பக்வாசயங்களில் ஏற்படும் ஆமத்திற்கான லங்கன பாசன சிகித்ஸை செய்தாலே நல்ல பலன் தருகிறது. ஆகார ரஸத்திலிருந்து ரஸம் ரத்தம் முதலிய தாதுக்கள் ஏற்பட தாத்வக்னிகள் உதவ வேண்டியிருக்கிறது. ஆமவாதம் அம்லபித்தம் முதலிய நோய்களில் சரீரம் முழுவதும் காணப்படும் ஆமலக்ஷணங்கள் இவ்விதம் தாத்வக்னிகளின் பலக் குறைவால் ஏற்பட்ட ஆமநிலேயை காரணமாகக் கொண்டவைகளே. மாதவ நிதானத்தில் ஆமவாதத்தின் குறிகளில் ஹிருதயத்தின் பலவீனமும் பாரமும் (கௌரவமும்) கூறப்படுகின்றன. இவ்விதம் குறிப்பிடப்படும் ஹிருதயம் கெடுதியை நவீன விஞ்ஞானம் நன்கு விளக்குகின்றது. ஆமவாதத்தின் ஆரம்ப நிலேயிலேயே ஆமம் நன்கு பக்வமடையச் செய்யும் சிகித்ஸையாக லங்கனம்—பாசனம் முதலியவைகள் செய்யும் ஆயுர்வேத வழி ஹிருதயத்தில் ஒரு கெடுதியும் ஏற்படாது பாதுகாக்கின்றது. ஹிருதயத்தில் கெடுதி ஏற்படுமளவு வியாதி முற்றி யிருந்தாலும் இந்த சிகித்ஸை முறையால் எதிர்பாராத அளவில் கெடுதிகள் மறைகின்றன. ஹிருதயத்தின் உருவமைப்பின் என்ன விதமாகக் கெடுதிகள் ஏற்படுகின்றன என்பது பற்றிய விவரணம் ஆயுர்வேதத்தில் பூர்ணமாகக் குறிப்பிடப்படா விடினும், கெடுதி வரும் வகையைப் பற்றி—ஸம்பிராப்தியைப் பற்றி விவரணம் மிகவும் யுக்தி யுக்தமாகக் குறிப்பிடப்படுகின்றது.

அன்னரஸம் புளித்துப் போதல்; கிரஹணி நோயில் கிரஹணி (சிறுகுடல்) யின் சீர் கேட்டால் லகுவான உணவு கூட ஜீர்ணமாவதில்லே. ஜீர்ணமாகாத உணவு புளித்துக் காடியாகி விஷமாகி விடுகின்றது. Lactic Acid (மோர்காடி) Butyric Acid

(வெண்ணெய் புளிப்பு) முதலிய பல காடிகள் உற்பத்தியாகின்றன. இதை விதாஹம், விதக்தாஜீர்ணம், அம்லபாகம் என்றெல்லாம் குறிப்பிடுகிறோம். நவீனர்கள் இதை சுத்தபாகம் (Acid fermentation) என்பர். இவ்விதப் புளிப்பினால் ஏற்படும் அஜீர்ணத்தை விதக்தாஜீர்ணம் (Acid dyspepsia) என்பர். இந்தப் புளிப்பு கிரஹணியில் ஏற்படுவது. இதே புளிப்பு உள் உறுஞ்சப் பட்ட ரஸதாதுவில் ஏற்பட்டால் உடல் முழுவதும் இதன் குறிகள் காணப்படுகின்றன. அம்ல பித்தம் இவ்வகைப்பட்டது. இதன் முக்யக் குறி க்லமம் என்பது. அதாவது ஒருவித வேலையின்றி ஏற்படும் களைப்பு—(Exhaustion). இந்தக் களைப்பைப் பல கரமான ஒளஷதங்கள் நீக்குவதில்லை. தாதுக்களில் சேர்ந்திருக்கும் புளிப்பு காரணமாக இது ஏற்படுகின்றது. ஆமவாதத்தில் காணப்படும் ஹிருதயக் கெடுதி மற்றும் உடல் பூராவும் காணப்படும் பல குறிகள் இந்த ரஸப்புளிப்பால் ஏற்படுபவையே.

புளிப்பு மிகுதியாய் உண்பதால் பித்தமும் கபமும் அதிகமாகும். இதேமாதிரி ரஸதாதுவில் புளிப்பு மிகுந்திருக்கும் போது ஆங்கு கபமும் பித்தமும் அதிகமாகி வாயுவை ஆவரணம் செய்து ஆமவாதத்தை உண்டாக்குகின்றன. ஆமவாதம் (கீல்வாயு) முக்யமாக பூட்டுகளில் காணப்படுகின்றது. பூட்டுகளில் ச்லேஷக கபம் தங்கியிருக்கின்றது. அந்த இடத்தில் ஆமரஸதாது தங்கும் போது ஆங்கு நோய் உண்டாகின்றது. பித்தத்தின் மிகுதி காரணமாக ச்லேஷ்மதர கலைகளில் பாகமும் (inflammation) ச்லேஷ்ம கபத்தில் மிகுதி காரணமாக நீர் (synovial fluid) தங்குதலும், தடைபடும் வாயுவால் வலியும் ஏற்படுகின்றது. பாகம் அளவுக்கு மீறினால் வியாதி தங்கி ஸ்திரமான கெடுதலைத் தருகின்றது.

முன் கூறியது போல ஹிருதயம் பிரதானமான கபஸ்தானமானதால் ஆங்கும் இதே ரீதியில் ஆமவாதத்தால், வெளியிலுள்ள ச்லேஷ்மதர கலைகளிலும் ஹிருதயக் கதவுத் தசைகளிலும் கலைகளிலும் ஹிருதயத் தசைகளிலும் ஏற்படும் பாகத்தை Pericarditis, Endo carditis, Myo carditis என்று வியவஹரிக்கின்றனர். ஹிருதயத்தின் பக்கத்திலுள்ள சவ்வுகளில் ச்லேஷ்ம கபத் திரவம் அளவில் மீறி அதிகமாகச் சுரந்து தங்குமானால் Pericarditis with effusion என்பர்.

வயிற்றிலுள்ள கலைகளில் ஏற்படும் பாகமும் அதில் நீர் தங்குதலும் உதரமென்றும் ஜாதோதக-(நீர்வைத்த) உதரம் என்றும் குறிப்பிடப் படுவது போல, ஹிருதயதர கலையின் பாகத்திலும் ஜாதோதக (நீர் வைத்த) நிலை ஏற்படுவது குறிப்பிடத் தக்கது. இந்த விகாரங்கள் ரஸதாதுவின் சுத்த பாகத்தாலும்

கப விருத்தியாலும் ஏற்படுபவை. இதை கபஜ ஹிருத்ரோகம் என்ற பெயரில் குறிப்பிடலாம்.

கபஜ ஹ்ருத்ரோகம் : ஹிருதய ரோகங்களில் பொதுவாக ஹிருதயத்தின் செயலில் ஏதாவது ஒருவகையில் மாறுதல் ஏற்படுகின்றது. அத்துடன் உடல் நிறம் மாறுதல், மூர்ச்சை, ஜ்வரம், இருமல், காஸம், விக்கல். ச்வாஸம், வாய் ருசி மாறுதல், நாவரட்சி, மோஹம், வாந்தி, கபம் துப்புதல். ஹிருதய ப்ரதேசத்தில் வலி. அருசி முதலிய பொது லக்ஷணங்களும் காணும். கபஜ ஹிருதய ரோகத்தில் முக்யமாக ஹிருதயம் ஸ்தம்பித்துள்ளது போன்றும் மறத்துப் போனது போன்றும் அழுத்தப்பட்டுள்ளது போன்றும் கல் உள் வைத்துள்ளது போன்றும் மந்தமானது போன்றும் உணர்ச்சி. ஹிருதயம் கனத்துப் போதல். இவை அந்த இடத்தில் உணரப்படும் குறிகள்— அத்துடன் சோம்பல், அசதி, தூக்கம், வாய் தித்தித்திருத்தல்; வாயில் அதிகமாக ஜலம் ஊறுதல், கபம் காரித் துப்புதல், அருசி, அக்னி மாந்தம், ஜ்வரம் போன்ற மற்ற குறிகளும் காணும். இதில் சோதத்திற்கும் ஜலோதரத்திற்கும் உள்ள சிகித்ஸையும் விசேஷமாக ஸமீரபன்னக ரஸம் போன்ற உஷ்ண தீக்ஷ்ண குணமுள்ள மருந்துகளை ஸேவிப்பதும் நல்ல குணம் தருகின்றது.

ஹிருதயதரகலை (சவ்வு) களில் பாகத்தையும் நீர் தேங்கும் நிலையைப்பற்றியும் யோசித்தோம். இம்மாதிரியே புப்புஸதரகலைகளில் ஏற்படும் பாகத்தைப் பார்ச்வ சூலம் (Pleurisy) எனவும் பாகத்துடன் ஜலம் தேங்கும் (ஜாதோதக) நிலைமை (wet Pleurisy) எனவும் பெயர் வழக்கத்திலுள்ளது. காச்யப ஸம்ஹிதையில் ஹிருதயத்திலும் விலாவிலும் கபம் சேர்ந்து உண்டாகும் நிலையை பார்ச்வ சூலம் என்று குறிப்பிடுகிறார்.

कफो हि वायुना क्षिप्तो विष्टब्धः पार्श्वयोर्हृदि ।
खरीकृतश्च पित्तेन शल्यवद्बाधते नरम् ।

— காச்யப ஸம்ஹிதை.

கபமானது வாயுவால் ஹிருதயத்திலும் விலாப்புறங்களிலும் அடைக்கப்பட்டு பித்தத்தால் காய்ந்து சல்யம் போன்றாகி மிகுந்த வேதனையை உண்டாக்குகின்றது. என்பதே காச்யப வசனத்தின் பொருள்.

கபம் அளவில் அதிகமாகும் போது இரு பரிணாமங்கள் ஏற்படுகின்றன. ஒன்று ஆங்காங்கு அதிகமான கபம் தங்கி பூட்டுகளில் வீக்கம் போன்ற உபத்திரவங்களை ஏற்படுத்துகின்றது. அல்லது வாய் மூக்கு முதலிய துவாரங்கள் வழியாக வெளியா

கின்றது. சில சமயத்தில் கபம் அளவில் அதிகமாகா விட்டாலும் வாயு அதனிடத்திலிருந்து கபத்தைக் கிளப்பி வெளியாக்குவதால் கபம் அதிகமாகத் தோற்றுவதுண்டு. இவ்விதம் கபத்தை வெளியாக்காமல் உள்ளேயே சவ்வுகளில் நிரம்பச் செய்வதும் உண்டு. இந்த நிலை புப்புஸதர கலைகளில் ஏற்படும் போது வாயுவால் விலாப்புறங்களில் வலி மிகுந்து காணும். இங்கு ரோகத்தை ஏற்படுத்தும் வாயுவை ப்ரதானமாகவும் ஸ்தான ஸஞ்சயமடைந்த கபத்தையும் லக்ஷ்யமாகக் கொண்டு சிகித்ஸை செய்தல் அவச்யம். இவ்விதம் ஸஞ்சயமடைந்த கபம் பித்தத்தால் நன்கு காய்ந்து விட்டால் Dry Pleurisy பார்ச்வ சூலம் ஏற்படுகின்றது. பித்தத்தால் காயாதிருக்கும் நிலையில் Wet Pleurisy ஏற்படுகின்றது. காயாதுள்ள நிலையில் காச்யபரின் சிகித்ஸை முறை கவனிக்கத் தக்கது.

तस्याशुष्कस्य लीनस्य विलग्नस्य कृशात्मनः ।
दुःखनिर्हरणं कर्तुं तीक्ष्णादन्यन्न भेषजात् ॥

பார்ச்வ (புப்புஸ) தர கலைகளில் கபம் காயாமல் தங்கி ஒட்டிக் கொண்டிருக்கும் போது தீக்ஷ்ணமான ஔஷதங்களைக் கொண்டு கபத்தை வெளியாக்கும் வழியைப் பின்வருமாறு காச்யபர் குறிப்பிடுகிறார். "தீக்ஷ்ணமான நஸ்யங்கள், தீக்ஷ்ணமான கவலக்ரஹங்கள், வியர்ப்பித்தல். இவை முக்யமான சிகித்ஸையாகும். மாதுளம்பழம் இஞ்சி இவைகளின் சாற்றில் சிறிது இந்துப்பு, உப்பு, கந்தக வெடியுப்பு கலந்து சூடாக்கி நஸ்யம் கொடுக்கலாம் இதனால் கபம் இளகி வெளியாகும். கபம் வெளியானதும் தலை ஹிருதயம் மென்னி வாய் கண் இவைகள் தெளிவடையும், மயக்கம், வாய் காய்தல், ச்வாஸம் காஸம் இவைகளும் குறையும். நோயாளி தூங்காமலிருக்க அடிக்கடி நஸ்யமும் அஞ்சனமும் செய்ய வேண்டும். இஞ்சிச்சாறு, மாதுளம்பழச்சாறு, இந்துப்பு, சுக்கு, திப்பிலி மிளகு இவைகளைக் கலந்து வாய்நிரம்ப வைத்துக் கொண்டிருக்க (கவலக்ரஹம்) கபம் இளகியதும் துப்பிவிடலாம். கபம் வெளியானதும் விலாப்புறம் தலை ஹிருதயம் இவைகளில் பாரமிறங்கிலாகவம் ஏற்பட்டுத் தெளிவு ஏற்படும்."

ஹிருதயரோகத்திலும் பார்ச்வ சூலரோகத்திலும் ஜாதோதக நிலையிலும் கபஸஞ்சய நிலையிலும் ஆயுர்வேத வழியில் சிகித்ஸை செய்து பார்க்க மேற்கண்ட யுக்திகள் நல்ல வழிகாட்டிகளாகும்,

நெ.		ஸம்ஸ்க்ருதப் பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப்பெயர்
204	करमूलं	கரமூலம்	மணிக்கட்டு	Wrist
205	कराग्र	கராக்ரம்	முன்கை, முழங்கை	Anterior part of the hand. Forehand.
206	करांगुलयः	கராங்குலி	கைவிரல்கள்	Fingers
207	करांगुष्ठः	கராங்குஷ்டம்	கட்டைவிரல்	Thumb, Pollex
208	करोटिः करोटी	கரோடி	மண்டைஓட்டு கூடு	Cranium
209	कर्णः	கர்ணம்	காது	Ear
210	कर्णनाडी कर्णपथः	கர்ணநாடி கர்ணபதம்	வெளிக்காதுக்குழாய் ,,	External Auditory Canal.
211	कर्णपालिः	கர்ணபாலி	காது மடல்	Lobule of the Ear
212	कर्णपीठं	கர்ணபீடம்	காதுக்குழி மேல்புறம், காது மடல்	Bottom of the conche, Lobule of the ear.
213	कर्णपुत्रकः	கர்ணபுத்ரகம்	காதுக்குழியினருகில் சங்குவடிவிலுள்ள பெரிய தடிப்பு	Tragus
214	कर्णपुत्रिका	கர்ணபுத்ரிகா	சங்குவடிவிலுள்ள சிறிய தடிப்பு	Antitragus.

நெ.		ஸம்ஸ்க்ருதப் பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
215	कर्णपृष्ठ	கர்ணபிருஷ்டம்	காதின் அடித்தளத்தில் உள்ள எலும்பு பிரதேசம்	Mastoid region.
216	कर्णमूल	கர்ணமூலம்	காதின் அடித்தளத்தில் 2 அங்குல அளவிற்குள்ள கிரந்திகளுள்ள இடம்	Parotid region
217	कर्णलतिका	கர்ணலதிகா	புறக்காது, காதுமடல்	Lobule of the ear
218	कर्णशष्कुलिका	கர்ணசஷ்குலிகா	காதுக்குழியின் வெளிப்புறம் மடல்	Pinna, Auricle.
219	कर्णस्रोतः	கர்ணஸ்ரோதஸ்	காதின் வெளிப்புற வழி	External Auditory meatus
220	कर्णावटुः	கர்ணவடு	காதுக்குழி	Cavum, Conche of the ear
221	कर्णास्थिः	கர்ணஸ்தி	காது அமைந்துள்ள எலும்பு	Temporal Bone, excluding Squama.
222	कर्पराणि	கர்பரம்	மண்டை ஓட்டெலும்பு	Cranial Bones.

நெ.		ஸம்ஸ்க்ருதப் பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
223	कला	கலா	1) செவ்வு. 2) உடலின் சில பாகங்கள். 3) குணம்.	1) Membrane Fibrous serous, Mucous, 2) Constituents or parts of the body 3) qualities
224	कलाविका	கலாவிகா		Distal third of the fore-arm
225	कलेवरं	கலேவரம்	உடல்	Body
226	कशेरुका	கசேருகா	முதுகெலும்பின்பகுதி, கணு எலும்பு	Vertebra
227	काकलं काकलकं	காகலம் காகலகம்	உள்நாக்கு	Uvula
228	काण्ड:	காண்டம்	எலும்பு - நீள்எலும்பின் நடுப் பகுதி	Bone, expecially shaft of the bone
229	कामसिरा	காமஸிரா	ஜனன உறுப்புக்களுக்கு விரைப்புத் தரும் நரம்புகள்	Nerves and Vessels of erection (Dorsal nerves and vessels of penis or clitoris.

18876
LBMW1189
M5425

எ.	ஸம்ஸ்க்ருதப் பெயர்		தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
230	कायच्छिद्राणि	காயச்சித்ரம்	உடலின் பல்வேறு பள்ளங்கள் அல்லது அறைகள்	Apertures of the body
231	कायद्वारं	காயத்வாரம்	மஹாஸ்ரோதஸ்ஸின் ஆரம்ப இடமான வாய்	Entrance of the alimentary Canal
232	कायः	காயம்	1) சரீரம் 2) ஜீர்ண உறுப்புகள்	1) Body 2) In restricted sense digestive system or digestive tube
233	कायाग्निः	காயாக்னி	ஜடராக்னி	Abdominal fire in the form of digestive secretions
234	कालकः	காலகம்	1) கரியவிழி - திரை 2) விழியை மேற்பக்கம் இழுக்கும் தசைநார்	1) Iris 2) Fibro - cartilaginous pulley of the superior oblique
235	कालखण्डं	காலகண்டம்	கல்லீரல்	Liver
236	कालिका	காலிகா	அசுத்த ரத்தக் குழாய்	Vein

வாரியர்

க்ஷீரபலா - 101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை : 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

(1936-ல் நிறுவப்பட்டது.)

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.

MUSK MERCHANTS.

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனாமாக அனுப்பப் பெறும்.

"மார்தண்ட"வின் ஆயுர்வேத இஞ்சக்ஷன்களும் ரஸம், ரஸாயனம், ஆஸவாரிஷ்ட முதலிய மருந்துகளும்.

படௌத் **மார்தண்ட பார்மக்யூடிகல்ஸ்** என்னும் வைத்யசாலை சம சீதோஷ்ண வசதி, நவீன இயந்த்ரம் முதலியவை நிறைந்தது. இங்கு அரசாங்க அனுமதிபெற்று தகுதிவாய்ந்த ரஸாயனிகளின் சிறந்த மேற்பார்வையில் 17வகை ஊசிமருந்துகள் (இஞ்சக்ஷன்கள்) தயாரிக்கப்படுகின்றன. அவைகள் உடனே குணமளிப்பதுடன் எவ்வித அபாயமுமில்லாதவை என உறுதி கூறுகிறோம், இவைகளுடன் சிறந்த அனுபவம் பெற்ற இரண்டு ஆயுர்வேதாசார்யர்களின் மேற்பார்வையில் சாஸ்த்ரீய முறை தவறாது கூபீபக்வ ரஸங்கள், ரஸாயனங்கள், பஸ்மங்கள், சூர்ணங்கள் இயந்திர மூலமாக தயாரிக்கப்பெறுகின்றன. வெல்லத்துக்குப்பதில் சர்க்கரை சேர்க்கப்பெற்று நீடித்து நிற்கக்கூடியதும், குணமளிக்கக் கூடியதுமான ஆஸவங்கள், கஷாய சத்துக்கள் முதலியனவும் தயாரிக்கப்படுகின்றன.

மார்த்தண்டவின் படங்களடங்கிய பெரிய விலை ஜாப்தாவுக்கும் மருந்துகளுக்கும் எழுதுங்கள், கடிதங்கள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவேண்டும்,

எங்கும் ஏஜண்டுகள் தேவை.

MARTAND PHARMACEUTICALS.
(Research Institute of Indian Medicines)
BARAUT S. S. Rly. (U. P.)

தி இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185

லேட்டிஸ் பிரிட்ஜ்ரோட், அடையாறு, மதராஸ் 20.

தபால் பெட்டி நெ. 907. போன் நெ. 71628.

ப்ரஸிடெண்ட் :— வைத்யரத்ன, கேப்டன்
G. ஸ்ரீனிவாஸமூர்த்தி, பி. ஏ., பி. எல்., எம். பி. ஸி. எம்.

வைஸ்பிரஸிடெண்ட் :—
டாக்டர் Y. சூர்யநாராயண ராவ், எல். ஐ. எம்.

அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை :— ரூ. 100,000
(பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 20.000 பங்குகள் கொண்டது)
வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை ... ரூ. 65.395
சங்கத்தின் க்ஷேம நிதி ... ரூ. 1,89,586
சங்கத்தின் இதர நிதிகள் ... ரூ. 2,22,105

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள தேசீய இந்திய வைத்தியர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களும் இந்த சங்கத்தில் மெம்பராகச் சேரலாம்.

பங்கு ஒன்றுக்கு ரூ. 5–00. பிரவேச கட்டணம் 25 நயாபைசாக்கள்)

2. ஆயுர்வேத, சித்த, யூனனி தேசீய மருந்துகள், சாஸ்த்ரீய முறைப்படியும், தக்க மேற்பார்வையுடனும் தயார் செய்து, தேசீய மருந்துகளைக் கையாளும் வைத்தியர்களுக்கு சப்ளை செய்யும் சிறந்த கூட்டுறவு சங்கம்,

— எமது வெளியீடுகள். —

1. **வைத்ய யோகரத்னவளி** ஆங்கில பிரதி ரூ. 6—00
   ,, தெலுங்கு பிரதி ரூ. 6—50
2. **சித்தபார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00
3. **யூனனி பார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00

(தபால் கட்டணம், விற்பனை வரி பிரத்தியேகம்.)

கிளை அலுவலகங்கள் :—

(1) 20/320, பெட்டி பொட்டலவாரி தெரு, கவர்னர் பேட்டை, விஜயவாடா–2. (ஆந்திர ராஜ்யம்.)

(2) 88, ஆற்காடு சீனிவாச ஆச்சாரி தெரு, பெங்களூர்–2. (மைசூர் ராஜ்யம்.)

(3) கோவாபரேடிவ் அர்பன் பாங்கு கட்டிடம், கல்லை ரோடு, கோழிக்கோடு–2. (கேரள ராஜ்யம்.)

(4) நகர விற்பனை டிப்போ, 4/186, மவுண்ட் ரோடு, மதராஸ்–2. டெலிபோன் நெ. 86520.

VAIDYACHANDRIKA MAY—1959 Regd. No. M. 4018.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

“சக்தி ஸஞ்ஜீவி”

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம் எங்தும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :—

சக்தி விலாஸ வைத்தியசாலா,

கரூர். (S. Ry.)

Printed at the Srivilasam Press, Srirangam and Published by S. V. Radhakrishna Sastri for Tamilnad Ayurveda Maha Mandalam, Bharat Ayurveda Sala, 27, Chinnakadai Street, Teppakulam, Tiruchy
Editor: S. M. Sundararajacharya, Srirangam.